அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்).

தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

2. அறிவிப்பு.

சட்டமன்ற மேலவை நிகழ்ச்சி நிரலில் மாற்றம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று எடுத்துக்கொள்வதாக இருந்த பிற்பட்டோர் நலன் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம் நாளை காலை எடுத்துக் கொள்ளப்படும்.

மறைந்த உறுப்பினர் திரு. பிச்சை அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த அவை ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் நாளை 30—4—1986 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

முற்பகல் 10.02

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

209. கர்நாடக மாநில போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பயணிகள் பேருந்துகளுக்கு 23—3—1986 முதல் 1—4—1986 முடிய உள்ள காலத்திற்குச் செலுத்தக் கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து உள் துறையின் 7—3—1986 ஆம் நாளிட்ட 582 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

210. தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு சாராய (சில்லறை விற்பனை கடைகள்) விதிகளை வகுப்பது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 18—6—1985 ஆம் நாளிட்ட 593 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படு கிறது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

*172. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1986).

† 173. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெருந் தொழில்கள்) (தமிழ், ஆங்கிலம்).

† 174. 1986-87 ஆம் ஆண்டிற்கான தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

† 175. 1986-87 ஆம் ஆண்டிற்கான சர்க்கரைத் தொழில் பற்றிய செயல் முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

† 176. 1986-87 ஆம் ஆண்டிற்கான புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

177. கோரிக்கை எண் 1—நிலவரித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).

178. வருவாய்த் துறையின் 1986-87 ஆம் ஆண்டிற்கான சாதனை அறிக்கை (தமிழ், ஆங்கிலம்).

---

* 26—4—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற் றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

† 28—4—1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.